# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2329/46 - 2023 අප්‍රේල් මස 28 වැනි සිකුරාදා - 2023.04.28

*2329/46 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 107அ பிரிவின் கீழ்வரும் ஒழுங்குவிதிகள்**
**(அத்தியாயம் 235)**

திருத்தப்பட்ட சுங்க கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) பிரிவு 107அ (1) மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் அடிப்படையில், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், பின்வரும் ஒழுங்குவிதிகளை பிரகடனப்படுத்துகின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, ஏப்பிறல் 28.

**ஒழுங்குவிதிகள்**

1. இந்த ஒழுங்குவிதிகள் “2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பயணிகளின் பொதிகள் (விலக்கு உள்நோக்கி) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் ;

2. இந்த ஒழுங்குவிதிகள் 2023 ஆம் ஆண்டின் மே மாதம் 01 ஆந் திகதி முதல் மறு அறிவிப்பு வரும் வரை அமுலில் இருக்கும் ;

3. திருத்தப்பட்டவாறான, 1993 ஆம் ஆண்டின் நவெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 972/ 17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பயணிகளின் பொதிகள் (விலக்கு - உள்நோக்கி) விதிமுறைகள் - 1993 ; 5ஜி ஆம் இலக்கமுடைய புதிய பந்தி மற்றும் அட்டவணை அ என்பவற்றை உள்ளீடுசெய்வதன் மூலம் மேலும் திருத்தப்பட்டு, பின்வருமாறு வாசிக்கப்படும் :


1A – PG 6313 – 481 (2023/05)


*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

"நாட்டிற்குத் திரும்பும் இரட்டைக் குடியுரிமையுடையவர் உட்பட எந்தவொரு இலங்கையர்களும், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் 2023 ஆம் ஆண்டின் ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதிய 01/ 2023 ஆம் இலக்க தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி அளவுகோல்களுக்கு உட்பட்டு பன்னிரண்டு (12) மாதங்களுக்கு ஒருமுறை, அவரது/ அவள் முறையான வங்கி வழி மூலம் நாட்டிற்கு அனுப்பப்படும் பணமாக வருவாயின் குறைந்தபட்சத் தொகையின் அடிப்படையில், அட்டவணை அ இன் நிரல் இல. (2) இல் வழங்கப்பட்டுள்ளபடி, அட்டவணை அ இன் நிரல் இல. (4) இல் வழங்கப்பட்டுள்ள மேலதிக தீர்வையற்ற கொடுப்பனவுக்கு தகுதியுடையவர்களாவர்"

**அட்டவணை - அ**

| (1) | (2) | (3) | | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| தீர்வையற்ற கொடுப்பனவு வகுதி | பரிசீலிக்கும் காலத்திற்குள் ஒரு ரூபாய் கணக்கிற்கு அ. டொ. அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச தொகை செலுத்தப்பட வேண்டும் | உள்வரும் பயணிகளுக்கு தற்போதுள்ள தீர்வையற்ற கொடுப்பனவு வழங்கப்படுகிறது | | மேலதிக தீர்வையற்ற கொடுப்பனவு | மொத்த தீர்வையற்ற கொடுப்பனவு (அ. டொ.) |
| | | வெளிநாட்டில் தொடர்ந்து தங்கியிருக்கும் காலம் | தீர்வையற்ற கொடுப்பனவு (அ. டொ.) | | |
| வெள்ளி | 2,400-4,799 | 90 நாட்களுக்கு குறைந்த | 187.5 | 600 | 787.5 |
| | | 90-365 நாட்களுக்கு இடையில் | 625.0 | | 1,225.0 |
| | | 365 நாட்களுக்கு அதிகமான | 1,750.0 | | 2,350.0 |
| வெள்ளி-பிளஸ் | 4,800-7,199 | 90 நாட்களுக்கு குறைந்த | 187.5 | 960 | 1,147.5 |
| | | 90-365 நாட்களுக்கு இடையில் | 625.0 | | 1,585.0 |
| | | 365 நாட்களுக்கு அதிகமான | 1,750.0 | | 2,710.0 |
| தங்கம் | 7,200-11,999 | 90 நாட்களுக்கு குறைந்த | 187.5 | 1,440 | 1,627.5 |
| | | 90-365 நாட்களுக்கு இடையில் | 625.0 | | 2,065.0 |
| | | 365 நாட்களுக்கு அதிகமான | 1,750.0 | | 3,190.0 |
| தங்கம்-பிளஸ் | 12,000-23,999 | 90 நாட்களுக்கு குறைந்த | 187.5 | 2,400 | 2,587.5 |
| | | 90-365 நாட்களுக்கு இடையில் | 625.0 | | 3,025.0 |
| | | 365 நாட்களுக்கு அதிகமான | 1,750.0 | | 4,150.0 |
| பிளாட்டினம் | 24,000 அல்லது அதற்கு மேல் | 90 நாட்களுக்கு குறைந்த | 187.5 | 4,800 | 4,987.5 |
| | | 90-365 நாட்களுக்கு இடையில் | 625.0 | | 5,425.0 |
| | | 365 நாட்களுக்கு அதிகமான | 1,750.0 | | 6,550.0 |

EOG 05-0003

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.